செய்தி வெளியீடு எண்: 193 நாள் : 16.04.2016

**உரிய ஆவணங்கள் இல்லாமல் வாகனத்தில் கொண்டு சென்ற 130 அரிசி மூட்டைகள் – இதுவரை ரூ.23.66 கோடி ரொக்கம் பறிமுதல்**

தேர்தல் நடைமுறைகளையொட்டி, தமிழ்நாட்டில் தேர்தல் விதிகள் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றன. தேர்தல் பறக்கும் படையும், நிலையான கண்காணிப்புக்குழுவும் மாவட்டங்களில் சோதனை செய்து உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்து வருகிறார்கள்.

தேர்தல் தொடர்பான பறக்கும்படை 14.04.16 அன்று வாகன சோதனை மேற்கொண்டபோது, உரிய அனுமதியோ, ஆவணங்களோ இல்லாமல் வாகனம் மூலம் நீலகிரி மாவட்டத்தில் கொண்டு சென்ற ரூ.1 லட்சம், கோவை மாவட்டத்தில் ரூ.1.40 லட்சம், அரியலூர் மாவட்டத்தில் ரூ.1.36 லட்சம், சேலம் மாவட்டத்தில் ரூ.5.66 லட்சம், வேலூர் மாவட்டத்தில் ரூ.1.42 லட்சம் மற்றும் 78 மூட்டை அரிசி மூட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்த ஒரு நாள் மட்டும் ரூ.10,83,425/– ரொக்கம் கைப்பற்றப்பட்டதால், இதுவரை ரூ.9,33,30,225/– ரொக்கம் பறக்கும் படையினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நிலையான கண்காணிப்புக்குழு 14.04.2016 அன்று (SST) சோதனை மேற்கொண்டபோது, கன்னியாகுமரி மாவட்டத்தில் 1.40 லட்சம், சென்னை மாநகரில் ரூ.6 லட்சம், அரியலூரில் ரூ.4.49 லட்சம், ஈரோட்டில் 6.23 லட்சம், திருவண்ணாமலையில் 52 அரிசி மூட்டைகள் என மொத்தம் ரூ.19,10,050/– ரொக்கமாக கைப்பற்றப்பட்டது. இதுவரை மொத்தம் 14,32,31,504/– ரொக்கமாக இக்குழுவினரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் விதிகள் மீறி ஆரத்தி எடுத்தவர்கள், அனுமதி இல்லாமல் குறும்படம் திரையிட்டு விளம்பரம் மேற்கொண்டது, அனுமதியின்றி பேனர் கட்டியது, சுவர்களில் கட்சி விளம்பரம் செய்தது, போஸ்டர், பேனர், கட்சி கொடிகளை அகற்றாதது போன்ற காரணங்களால் கோவை, சென்னை, விருதுநகர், ஈரோடு, தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களில் அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**